செ.வெ. எண்: 183 நாள்: 25.02.2011

## செய்தி வெளியீடு

மாண்புமிகு முதல்வர் தலைமையிலான இந்த அரசு பதவியேற்றவுடன் அரசு அச்சகங்களை நவீனமயமாக்கும் பொருட்டு வல்லுநர் குழுவினை நவம்பர் 2006இல் அமைத்தது.

அக்குழு உறுப்பினர்கள் அளித்த அறிக்கையின் அடிப்படையில், முதற்கட்டமாக அரசாணை (நிலை) எண்.147, தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை நாள் 22.06.2009இல் அரசு மைய அச்சகத்தில் 3.87கோடி மதிப்பில் இரு நவீன வெப்ஆப்செட் இயந்திரங்களை நிறுவிட ஆணை வழங்கப்பட்டது.

அதன்படி கொள்முதல் செய்யப்பட்ட இரு நவீன வெப்ஆப்செட் இயந்திரங்களும் அரசு மைய அச்சகத்தில் நிறுவப்பட்டு, இன்று 25.02.2011 அன்று மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அவ்விரு வெப்ஆப்செட் இயந்திரங்களிலும், Perfector Unit உள்ளதால் ஒரே நேரத்தில் இரு பக்கங்களிலும் நான்கு வண்ணங்களில் அச்சிட்டு, ஏ4 அளவில் 32 பக்கங்களைப் பெறலாம். இவற்றின் மூலம் ஒரு மணி நேரத்தில், 30 ஆயிரம் அச்சழுத்தங்களைப் பெறலாம்.

இருநவீன வெப்ஆப்செட் இயந்திரங்களும் கீழ்க்காணும் விவரக் குறியீடுகளைக் (Specifications) கொண்டதாகும்.

**1.Hi tower model**

**2.Lateral and circumferential movement registration facility on plate cylinder**

**3.Central control console unit**

**4.Auto paster**

இளைஞர்களுக்கு அரசுப் பணி வழங்குவதில் மிகுந்த அக்கறை கொண்ட இவ்வரசு பதவியேற்ற பின்னர் இதுநாள் வரை அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 30 பணியிடங்களும் கருணை அடிப்படையில் 43 பணியிடங்களும், நேரடி நியமனம் மூலமாக 112 பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

இன்றைய தினம் (25.02.2011) நேரடி நியமனம் மூலமாக இளநிலை புத்தகம் கட்டுநராக 4 ஆண்களும், 5 பெண்களும், இளநிலை மின்வினைஞராக 2 ஆண்களும் ஆக மொத்தம் 11 நபர்களும்,

கருணை அடிப்படையில் 'சி' - பிரிவில் இளநிலை உதவியாளர் தட்டச்சர் போன்ற பணியிடங்களில் 21 ஆண்கள், 5 பெண்களும், 'டி' பிரிவில் அலுவலக உதவியாளர் மற்றும் மஸ்தூர் போன்ற பணியிடங்களுக்கு 5 ஆண்களும், 1 பெண்ணும் ஆக மொத்தம் 32 நபர்களும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து பணிநியமன ஆணை பெற்றுள்ளனர்.

இத்துறையில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கடந்த ஐந்தாண்டு ஆட்சிக்கால சாதனையாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 30 பணியிடங்கள், கருணை அடிப்படையில் 75 பணியிடங்கள், நேரடி நியமனம் மூலமாக 112 பணியிடங்கள் என மொத்தம் 227 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்களும், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை செயலாளர்.திரு.ரா.சிவகுமார் அவர்களும், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் இயக்குநர் திரு.து.விவேகானந்தன் அவர்களும் மற்றும் துறையின் உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

இயக்குநர்,
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை,
சென்னை-2.

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.